பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28 04 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

## ஆகாஷவாணி செய்திகள்

**தலைப்புச் செய்திகள்**

1. நாட்டில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் உள்ளூர் மொழிகளை நவீன தொழில்நுட்பத்தின் மூலம் ஒருங்கிணைக்கும் முயற்சிகளுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

2. இந்தியாவுக்கு எதிராக தவறான தகவல்களை பரப்பி வரும் 16 பாகிஸ்தானிய யுடியூப் சேனல்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

3. தமிழக அரசு ஊழியர்களுக்கு 2 சதவீத அகவிலைப்படி உயர்வு உள்ளிட்ட 9 அறிவிப்புகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று சட்டப்பேரவையில் வெளியிட்டார்.

4. கனடாவில் பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் இன்று மோதுகின்றன.

*---- இனி விரிவான செய்திகள் ---*

நாட்டில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் உள்ளூர் மொழிகளை நவீன தொழில்நுட்பத்தின் மூலம் ஒருங்கிணைக்கும் முயற்சியை மேற்கொண்டு வரும் சர்வம் ஏஐ புத்தொழில் நிறுவனத்திற்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இந்த நிறுவனம் இந்தியாவின் பெரும்பான்மை மொழிகளை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் புதிய தளத்தை ஏற்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக மேற்கொள்ளப்பட்ட அரசின் முயற்சியில் சர்வம் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ் இந்த செயலியை பயன்படுத்துவதற்கான புதிய முறை உருவாக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மொழிகளை பிரபலப்படுத்துவதற்காகவும், உலகளாவிய பிற மொழிகளை பயன்படுத்துவோர் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாகவும் இந்த செயலி உருவாக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

உள்நாட்டு தொழில்நுட்பத்திலேயே மிகச்சிறந்த வகையில் எளிமையாக கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இந்த செயலி விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள தகவல் தரவுகளின் அடிப்படையில் மொழி கலாச்சாரம் மற்றும் அதன் அடிப்படைத்தன்மையை மாற்றாமல் நவீன தொழில்நுட்ப அடிப்படையில் உருவாக்குவதற்கான முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

<<<><><><>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் மன் கி பாத் உரையானது தீவிரவாதத்திற்கு எதிரான நம்நாட்டின் ஒற்றுமையையும், உறுதியான தீர்மானத்தையும் வெளிப்படுத்துவதாக உள்ளது என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தமது சமூக வலைதளப் பதிவில் இதனை குறிப்பிட்டுள்ள அவர், மியான்மர் நிலநடுக்கத்தின்போது இந்தியாவின் ஆபரேஷன் பிரம்மா குழு மேற்கொண்ட உடனடி நடவடிக்கைகளுக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<><><><>>>

சமா டிவி, ஜியோ நியூஸ் உட்பட 16 பாகிஸ்தானிய யுடியூப் சேனல்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக இந்தியாவுக்கு எதிராக தவறான தகவல்களை வெளியிட்டு வரும் காரணத்தால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

நம்நாட்டு ராணுவம் மற்றும் பாதுகாப்பு முகமைகளுக்கு எதிரான தவறான மற்றும் பொதுமக்களின் அமைதிக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் இவற்றின் செயல்பாடுகள் தொடர்ந்து இருந்து வருவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

<<<><><><>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ஜம்மு கஷ்மீர் சட்டப்பேரவை சிறப்புக் கூட்டம் தற்போது ஜம்முவில் நடைபெற்று வருகிறது.

இன்று காலை சிறப்புக் கூட்டம் கூடிய போது தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதையடுத்து சுற்றுலாப் பயணிகள் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலுக்கு எதிராக தீர்மானம் ஒன்றை துணை முதலமைச்சர் திரு சுரீந்தர் சவுத்திரி பேரவையில் முன்வைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<><><><>>>

பஹல்காம் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளியினர் அமைதிப் பேரணி மேற்கொண்டனர்.

பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, பின்லாந்து, ஸ்பெயின் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் இந்தியர்கள் இத்தாக்குதலை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜெர்மனியின் பிராங்க்பட்டில் நேற்று நடைபெற்ற போராட்டத்தின் போது, 300 க்கும் மேற்பட்ட இந்தியர்கள் பங்கேற்றனர்.

<<<><><><>>>

தெற்காசியாவில் அமைதி நிலவுவதையே பங்களாதேஷ் விரும்புவதாக அந்நாட்டு வெளியுறவுத் துறை ஆலோசகர் திரு Touhid Hossain தெரிவித்துள்ளார்.

டாக்காவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா – பாகிஸ்தான் இருநாடுகளும் பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனை மூலமாக தற்போதைய சூழலுக்கு தீர்வு காண வேண்டும் என்று கூறியுள்ளார்.

<<<><><><>>>

கனடாவில் பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

அந்நாட்டின் மீது அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் இறக்குமதி வரி விதிப்பு உயர்வினை அறிவித்துள்ள நிலையில் இத்தேர்தல் நடைபெறுகிறது.

விலைவாசி உயர்வு, பருவநிலை கொள்கை விவகாரங்கள், பொருளாதார ஸ்திர நிலை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இத்தேர்தலில் முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தேர்தலில் கனடாவின் தற்போதைய பிரதமர் Mark Carney –வின் லிபரல் கட்சி, Pierre Poilievre தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி இடையே கடும் போட்டி நிலவிவருவதாக செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

<<<><><><>>>

மத்தியப்பிரதேசத்தில் மதுபான ஒப்பந்ததாரர்களுக்கு சொந்தமான 11 இடங்களில் மத்திய அமலாக்கத் துறை தற்போது சோதனை மேற்கொண்டு வருகிறது.

2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கருவூலத் துறை ரசீதுகளில் மோசடி நடந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<><><><>>>

தமிழக அரசு ஊழியர்களுக்கு 2 சதவீத அகவிலைப்படி உயர்வு உள்ளிட்ட 9 அறிவிப்புகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று சட்டப்பேரவையில் வெளியிட்டார்.

ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணம் பெறும் நடைமுறை இந்த ஆண்டே அமலுக்கு வரும்.

அரசுப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் கல்வி முன்பணம் உயர்வு, பண்டிகைக் கால முன்பணம் உயர்வு மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான பொங்கல் பண்டிகை தொகை 500 ரூபாயிலிருந்து ஆயிரமாக உயர்த்தப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளை முதலமைச்சர் இன்று வெளியிட்டார்.

<<<><><><>>>

சென்னையில் வளரிளம் பருவத்தினருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சை மையம் தொடங்கப்படுவதாக தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இம்மையத்தினை அவர் இன்று திறந்து வைத்து பேசினார்.

வளரிளம் பருவத்தினரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் இது அமையும் என்று அமைச்சர் கூறினார்.

(சவுண்ட் பைட் - மா.சு - 42 செகண்ட்ஸ்)

<<<><><><>>>

அஸ்ஸாம், மேகாலயா, அருணாச்சலப்பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர், கேரளா, திரிபுரா, மேற்குவங்கத்தின் கங்கை நதிப்பகுதிகளின் ஒருசில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் ஒருசில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அம்மையம் கூறியுள்ளது.

நாட்டின் மத்தியப் பகுதியில் நாளை முதல் 3 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்றும், கிழக்குப் பகுதியில் அதிகபட்ச வெப்பநிலை 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<><><><>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் இன்று மோதுகின்றன

ராஜஸ்தானில் இரவு ஏழரை மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

----------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்திய வீரர்கள் 7 பேர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் **Jannet, Simranjeet Kaur, Harsika, Anshika, Kushi Chand, Ahanna Sharma** ஆகியோரும், ஆடவர் பிரிவில் **Devansh-**ம் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

**<<<>>>**